# பாஸ்கா 2ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

கடவுளிடமிருந்து பிறப்பவர்கள் அனைவரும் உலகை வெல்வார்கள். அல்லேலூயா!

உயிர்த்த இயேசுவை சந்தித்து வழிபட வணங்க வந்துள்ள உங்கள் யாவரையும் அன்புடனே அவர் பெயரால் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

அவரிடமிருந்து பிறப்பவர்கள் யாவரும் உலகை வெல்வார்கள், இது பவுல் அடிகளாரின் மொழி. இதற்கு இயேசுவே சாட்சி. அவர் உலகை வென்றார். தந்தையாம் கடவுளும் அவரை உயிர்ப்பித்து உயர்வானத்திற்கு எடுத்துக் கொண்டார்.

அன்றைய ஆதி திருஅவையும் கடவுளிடமிருந்து பிறந்தவர்களாக, அவருடைய விழுமியத்திற்கு ஏற்ப நடந்ததாலேயே, கிறிஸ்தவர்கள் என்ற பெயர் பெற்றதோடு, பலரையும் கவர்ந்திழுத்து, சபை பெருக செய்தனர்.

நாமும் திருமுழுக்கால் மீண்டும் பிறந்துள்ளோம். நம்மால் உலகை வெல்ல முடிகின்றதா?

ஆம் என்றால் நன்றி கூறுவோம். இல்லையென்றால் திருமுழுக்கின் அருளை புதுப்பித்துக் கொண்டவர்களாக பலியிலே பங்கேற்று பயன் பெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை (திருத்தூதர் பணிகள் 4:32-35)

தூய ஆவியின் ஆற்றலால் தொடக்க கால கிறிஸ்துவர்கள் ஒரே மனமும், உள்ளமும் கொண்டவராய் இருந்தனர். ஆதலால், அவர்களுடைய வாழ்வில் இறையனுபவத்தை உணர்ந்தனர் என்று கூறும் இன்றைய முதல் வாசகத்துக்கு செவி கொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (1 யோவா 5:1-6)

இயேசு தான் மெசியா என்பதில் விசுவாசம் கொண்டால், கடவுளின் பிள்ளைகளாக, நாம் அன்பு வாழ்க்கை வாழ முடியும் என்று விசுவாசம் மற்றும் அன்பு கலந்த ஒற்றுமை உறவு பற்றி இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித யோவான் கூறுவதை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

**1.** உலகை வென்றவரே இறைவா!

திருஅவை அன்பர்கள் தங்களது அர்ப்பணத்தை புதுப்பித்து, உம்முடைய விழுமியங்களை வாழ்வாக்கி சாட்சியாகிட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உலகை வென்றவரே இறைவா!

உண்மையாம் உம்மை உலகு கண்டு கொள்ளவும், உலகிலே மீண்டும் புதுப்பிறப்பாக பிறந்திடவும், காணாமலேயே விசுவசித்து, பேறுபெற்ற நிலையடைந்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. உலகை வென்றவரே இறைவா!

பலியிலே பங்கேற்கும் நாங்கள் காணாமலே விசுவசிப்பதால் எங்களது பேறுபெற்ற நிலையில் தளர்ந்து போகாது விசுவாசத்தை எம்மிலே அதிகரித்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. உலகை வென்றவரே இறைவா!

ஆவியிலும் உண்மையிலும் பிறந்தவர்களாக உலகை வெற்றிக் கொள்ள, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. உலகை வென்றவரே இறைவா!

ஆதிக்கிறிஸ்தவ அன்பர்களின் வாழ்வுமுறை எம்மிலே அமைந்திட அதனால் உலகை நாங்கள் உம் பக்கமாய் கொணர்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com